**செய்தி வெளியீடு எண். 145** **நாள்: 15.03.2018**

# தனியார் செங்கற்சூளையில் கொத்தடிமைகளாக பணிபுரிந்தவர்களை வருவாய் அலுவலர்கள் மூலம் மீட்கப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்தார்

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், பாண்டேஷ்வரம் பகுதியில் தனியார் செங்கற்சூளையில் 147 நபர்கள் கொத்தடிமைகளாக பணிபுரிந்தவர்களை வருவாய் அலுவலர்கள் மூலம் மீட்கப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து அடிப்படை வசதிகளை அனைவருக்கும் ஏற்படுத்தி தருமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆவடி வட்டம், பாண்டேஷ்வரம் பகுதியில் செயல்பட்டு வந்த தனியார் செங்கற்சூளையில் 147 நபர்கள் கொத்தடிமைகளாக பணியில் ஈடுபட்டிருந்தனர். இத்தகவலை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நேரடியாக ஆய்வு மேற்கொண்டதில் 63 ஆண்கள், 49 பெண்கள் மற்றும் 35 குழந்தைகள் என மொத்தம் 147 நபர்கள் உள்ளனர் என்பதை கண்டறியப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சதிஷ்கர் மாநிலம் ராய்ப்பூர் பகுதி சேர்ந்தவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரையும் மீட்டு திருநின்றவூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டு உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் அவர்களுக்கு தேவைப்படும் மருத்துவ பரிசோதனைகளையும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவர்கள் அனைவருக்கும் அரசு விதியின் மூலம் ஒவ்வொருவருக்கும் ரூ. 20 ஆயிரம் நிதி அவர்களது கணக்கில் சேர்க்க வேண்டும். இவர்கள் அனைவரும் ஓரிரு நாளில் அவர்களது சொந்த மாநிலத்தில் ராய்ப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் வருவாய் அலுவலர்கள் மூலம் ஒப்படைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இவ்வாய்வில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, வருவாய்த்துறை அலுவலர்கள், மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**